**வாக்குமூலம்**
**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி**
**சி.சி.எண்.4/2020**
**வழக்கு சாட்சி – அ.சா.10**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வெங்கடேஸ்பிரபு | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | துரைச்சாமி | தொழில் | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | கிருஷ்ணகிரி | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.08.2024

**( 1 முதல் 4 எதிரிகள் வழக்கில் ஆஜராவதில் இருந்து விலக்க அளிக்கப்பட்டனர்.)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது கிருஷ்ணகிரி நகர் காவல் நிலையம் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 07.12.2018ம் தேதி 22.00 மணிக்கு தேனி மாவட்டம் தேனி நகர் காவல் நிலையம் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது தேனி காவல் துறை துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து வரப்பெற்ற தபாலை பெற்று அதனை பார்வையிட்டு தேனி காவல் நிலைய குற்ற எண் 880/2018 இதச பிரிவு 406, 420 ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். வாதியின் புகார் மனுவின் அசலையும், முதல் தகவல் அறிக்கையையும் நீதித்துறை நடுவர் தேனி அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். மேலும், புலன் விசாரணைக்காக வழக்கு கோப்பை காவல் ஆய்வாளர் தேனி அவர்களின் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். முதல் தகவல் அறிக்கை அசாஆ 8.

**1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எந்த தேதியில் நான் காவல் ஆய்வாளர் விசாரணைக்கு வழக்கு கோப்பினை அனுப்பி வைத்தேன் என்றால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அன்றையதினமே அனுப்பி வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை 25.12.2018ல் விசாரித்ததாக வாக்குமூலத்தில் காட்டப்பட்டுள்ளது என்றால், சரிதான். தேனி காவல் துறை துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து புகார் வரப்பெற்றதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் மேற்படி புகாரில் தேனி காவல் துறை கண்காணிப்பாளர்

அலுவலகத்தில் இருந்து பெறப்பட்டதற்கான அலுவலக முத்திரை காணப்படுகிறது என்றால் சரிதான். ஆனால் எனக்கு தேனி காவல் துறை துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்துதான் பெறப்பட்டது. காவல் கண்காணிப்பாளர் அலுவலக முத்திரை 28.11.2018ம் தேதியிட்ட முத்திரை இடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி புகாரை பெற்றவுடன் நான் சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யவில்லை என்றாலும், நேரடியாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துவிட்டேன் என்றால் சரிதான். காவல் ஆய்வாளரிடம் கொடுத்ததாக கூறப்படும் 161 வாக்குமூலத்தில் விசாரணை நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன் என்று காட்டப்பட்டுள்ளது அதன்படி யாரை நான் விசாரித்தேன் என்றால், நான் யாரையும் விசாரிக்கவில்லை. தட்டச்சின் போது பிழைகள் ஏற்பட்டிருக்கலாம். புகாரின் தன்மை உண்மையானதா இல்லையா என்பது குறித்து விசாரித்துவிட்டு வழக்கு பதிவு செய்யவேண்டும் என்றால், வழக்கு பிடிக்ககூடிய குற்றமாக இருந்ததால் வழக்கு பதிவு செய்தேன். மேல் அதிகாரி கேட்டுக்கொண்டதற்காக பொய்யாக எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. புகாரில் பதிவு தபால் மூலமாக காவல் துறை துணை கண்காணிப்பாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால், அது குறித்து எனக்குத் தெரியாது. பெறுநர் என்ற முகவரியில் துணை கண்காணிப்பாளர் எனக் காட்டப்பட்டுள்ளது.